# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தம்)

***1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி அமைச்சர் அவர்களால் 2019, ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2019, ஓகத்து மாதம் 09 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***306 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

**வாசகம் 2 :** இவ்வாசகம், 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 2019 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் ஆனால் ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லாமல் பதிவுசெய்யப்பட்ட உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகளின் சட்ட விளைவாந்தன்மைக்கு ஏற்பாடு செய்வதற்காகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏலவே பதிவு செய்யப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகளின் வலுவுறுத்தற்படற்பாலத்தக்க தன்மைக் காலப்பகுதி தொடர்பாகவும் 2019 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் அந்த உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகளைப் பதிவுசெய்கின்ற தேவைப்பாடு தொடர்பாகவும் அவை மேலும் வலுவுறுத்தப்படற்பாலதாக இருப்பதாகவும் அவற்றின் முன்னுரிமை தொடர்ந்து நிலவுவதற்காகவும் ஏற்பாடு செய்கின்றது.

**உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தம்)**

ச.வ. - ஓ. 67/2017

# 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "விற்பனை உண்டியல் ஒன்றாக அது ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுமிடத்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விற்பனை உண்டியலொன்றாக அது 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுமிடத்தும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக் களுடன் தொடர்புடைய ஏற்பாடுகள்.*

**3.** (1) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியன்று விற்பனை உண்டியலொன்றாக ஆவணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டொன்று வலுவிலுள்ளதாக இருக்குமிடத்து, அத்தகைய உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டு இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குத் தொடர்ந்தும் வலுவுறுத்தப்படற்பாலதாகவிருத்தல் வேண்டும், ஆனால், அது அத்தகைய இரண்டாண்டு காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் விற்பனை உண்டியலொன்றாக 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க,

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விற்பனை உண்டியலொன்று 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதன் மீது, அத்தகைய விற்பனை உண்டியல் தொடக்கத்தில் எத்தேதியிலிருந்து சட்டமுறையாக வலுவுறுத்தப் படற்பாலதாக வந்ததோ அத்தேதியிலிருந்து முழுநிறைவாக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன் அத்தகைய விற்பனை உண்டியல் தொடக்கத்தில் சட்டமுறையாக வலுவுறுத்தப் படற்பாலதாக வந்தநேரத்தில் அது எந்த முன்னுரிமைக்கு உரித்துடையதாக வந்ததோ அந்த ஏதேனும் முன்னுரிமை தொடர்ந்தும் மேலோங்குதல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாத (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விற்பனை உண்டியலொன்று அத்தகைய காலப்பகுதி முடிவடைந்தபின்னர் சட்டமுறையாக வலுவுறுத்தப்படற்பால தல்லாததாக வருதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்.